# விளம்பரப்பலகைகளில் தேசியமொழி எழுத்து பெரிதாக இருக்க வேண்டும்

கோலாலம்பூர், அக். 20-
தலைநகர் கோலாலம்பூரில் உள்ள வர்த்தக மையங்களிலும் கடைகளிலும் விளம்பரப் பலகைகளில் தேசியமொழிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று மீண்டும் நினைவுறுத்தியது.

குறிப்பாக அறிவிப்புப் பலகையில் உள்ள தேசிய மொழி எழுத்துகள் மற்ற மொழிகளின் எழுத்துகளைவிட பெரிதாக இருக்க வேண்டும் என்றும் அது தெரிவித்தது.

அனைத்து விளம்பரப் பலகைகளும் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அமைவதை அதிகாரிகள் உறுதி செய்வார்கள் என்றும் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.

1982ஆம் ஆண்டு கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேச விளம்பர துணைச் சட்டவிதிகளுக்கு ஏற்ப இது அமைகிறது என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது. கடைகளிலும் வியாபார மையங்களிலும் விளம்பரப் பலகைகள் அனைத்தும் தேசியமொழியில் இருக்க வேண்டும். அதில் மற்ற மொழிகளையும் பயன்படுத்தலாம். ஆனால் அளவு ரீதியாக தேசியமொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும் என அதன் துணை சட்டவிதிகள் குறிப்பிடுவதாக கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அறிக்கை சுட்டிக்காட்டியது

